11.12.2020 ம் தேதி வெள்ளிக்கிழமை மாலை 4 மணியளவில் நடைபெற்ற அவசர கூட்டம்:

தலைமை: திரு. ப. பாலகுருநாதன், எம்.எஸ்.ஸி.,
தனி அலுவலர் மற்றும் ஆணையாளர்,
மேலூர் நகராட்சி.



## மன்றப்பொருள் எண்:1

மேலூர் நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் சிறப்பு சாலை திட்டம் 2020–21–ன் கீழ் ரூ.11.00 கோடி மதிப்பீட்டில் சாலைப்பணிகளை மேற்கொள்ள நிர்வாக அனுமதி வழங்கும் பொருட்டு மன்றத் தீர்மானம் நிறைவேற்றி அனுப்பிவைக்குமாறு நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் கடிதம் ந.க.எண். , நாள் ஆம் தேதியிட்ட கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது. இதில் கீழ்க்கண்டவாறு நிதி ஒதுக்கீடு செய்து வரப்பெற்றுள்ளது.

| நகராட்சியின் பெயர் | மதிப்பீட்டுத் தொகை (ரூ.கோடியில்) | சிறப்பு சாலைகள் திட்ட நிதி (ரூ.கோடியில்) | நகராட்சி பங்களிப்பு தொகை (ரூ.கோடியில்) |
|---|---|---|---|
| மேலூர் | 11.00 | 9.90 | 1.10 |

எனவே, மேற்படி வரப்பெற்ற கடிதம் மன்றத்தின் பார்வைக்கும் கீழ்காணும் பணியை மேற்படி நிதி ஒதுக்கீட்டின் அடிப்படையில் மேற்கொள்ள தீர்மானம் நிறைவேற்றி நிர்வாக அனுமதி பெற நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களுக்கு அனுப்பிவைக்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

| வ. எண். | பணியின் பெயர் | நீளம் (கி.மீ) | அகலம் (மீ) | மதிப்பீடு தொகை (ரூ.இலட்சத்தில்) |
|---|---|---|---|---|
| 1. | இந்நகராட்சிக்குட்பட்ட வார்டு 1, 16, 24 ல் பல்லவராயன்பட்டி மெயின்ரோடு, குமார் நகர், 1, 2, 3, 4 வது குறுக்கு தெரு, காந்தி நகர் மற்றும் தெற்குப்பட்டி இ.பி.ஆபிஸ் ரோடு ஆகிய தெருக்களில் தார்சாலை அமைக்கும் பணி | 4.180 | 4.50 | 200.00 |
| 2. | இந்நகராட்சிக்குட்பட்ட வார்டு 1, 8,16 ல் முத்தமிழ் நகர் மெயின் ரோடு, 1, 2, 3 ஆகிய குறுக்கு தெருக்கள், பல்லவராயன்பட்டி 1,2 குறுக்கு தெரு மூவேந்தர் நகர் , ஸ்டார் நகர் ஆகிய தெருக்களில் தார்சாலை அமைக்கும் பணி. | 4.220 | 4.00 | 200.00 |
| 3. | இந்நகராட்சிக்குட்பட்ட வார்டு 4, 7, 8,19, 23,26ல் பேங்க் ரோடு, அண்ணா காலனி மெயின் மற்றும் 1, 2,3,4,5வது குறுக்கு தெருக்கள், எம்.சி.சி.செட், ஆண்கள்மேல்நிலைப்பள்ளி பின்புறம், ஜெயம் மருத்துவமனை குறுக்குத்தெரு, பாலமுருகன்கோவில் பின்புறம், வீரசூடாமணி கண்மாய், தமிழ்மொபைல்ஸ் பின்புறம், சிவகங்கை ரோடு, காந்திஜி பூங்கா ரோடு, மில்கேட் சத்தியா நகர் ஆகிய தெருக்களில் சிமெண்ட் கல்தளம் அமைக்கும் பணி. | 4.900 | 4.50 | 200.00 |
| 4. | இந்நகராட்சிக்கட்பட்ட வார்டு 1, 18, 24, 26ல் திருவள்ளுவர் நகர், மில்கேட் இ.பி.ஆபிஸ் முதல் மேலுருஞ்சி கண்மாய், பழையகக்காம்பட்டி, சொக்கர்ஊரணி ஆகிய தெருக்களில் தார்சாலை அமைக்கும் பணி | 4.150 | 4.50 | 200.00 |
| 5. | இந்நகராட்சிக்குட்பட்ட வார்டு 12, 16, 24, 26 ல், கருத்தபுளியம்பட்டி மயானம், போலீஸ் ஸ்டேசன் ரோடு, மில்கேட் காலனி முதல் பைபாஸ் முடிவு, ஜோதி உரக்கடை மற்றும் ஜோதிஉரக்கடை 2வது தெரு, எஸ்.எம். நகர், வலையன்குளம் , விஸ்வகர்மான தெரு ஆகிய தெருக்களில் தார்சாலை அமைக்கும் பணி | 4.200 | 4.50 | 200.00 |
| 6. | இந்நகராட்சிக்குட்பட்ட வார்டு 21, 27ல் மலம்பட்டி குறுக்கு தெருமற்றும் காலனி தெரு, மில்கேட் வடக்கு தெருக்களில் தார்சாலை அமைக்கும் பணி. | 2.100 | 4.50 | 100.00 |
| | மொத்தம் | 23.750 | | 1100.00 |

**அலுவலக குறிப்பு:**

மன்றம் அனுமதிக்கலாம்.

தீ60

**மன்றப்பொருள் எண்.02**

மேலூர் நகராட்சிக்கு சொந்தமான பேருந்துநிலையத்தில் செயல்பட்டு வந்த உணவகத்தை திரு.ஆர்.பகிரதன் என்பவர் உரிமம் பெற்று நடத்தி வந்தார். அன்னாரது உரிமத்தை ரத்துசெய்து மறுஏலம் நடத்தக்கோரி திரு.ஏ.பி.இளங்கோ என்பவரால் சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளையில் W.P.(MD).No 23224/2018ல் வழக்கு தொடரப்பட்டது.

மேற்படி வழக்கில் 05.02.2018ம் தேதியில் ஆணையாளர் நேரில் ஆஜராக தெரிவிக்கப்பட்டதின் அடிப்படையில் ஆணையாளர் நேரில் ஆஜரானதில் மேற்படி பேருந்து நிலைய உணவகத்தை 06.02.2018ம் தேதியில் பூட்டி சீல் வைத்து சாவியினை நீதிமன்றத்தில் ஒப்படைப்பு செய்ய அறிவுறுத்தப்பட்டதன் அடிப்படையில் உணவகம் பூட்டி சீல் வைக்கப்பட்டு நகராட்சியால் கையகப்படுத்தப்பட்டது.

சென்னை உயர்நீதிமன்ற மதுரைகிளையில் 01.03.2019ம் தேதிய தீர்ப்புரையில் மேற்படிபேருந்து நிலைய உணவகத்திற்கு 15.04.2019ம் தேதிக்குள் பொதுஏலத்துடன் கூடிய ஒப்பந்தப்புள்ளி நடத்த தெரிவிக்கப்பட்டது. ஆனால் நாடாளுமன்ற பொதுத்தேர்தல் நடத்தைவிதிகள் அமுலில் இருந்ததால் இவ்வலுவலக கடிதம் மூலம் பொதுஏலத்தை வேறு ஒரு தேதியில் நடத்த கால அவகாசம் கோரி நீதிமன்றத்தில் மனுத்தாக்கல் செய்யப்பட்டது. அதன்பேரில் நீதிமன்ற உத்தரவில் 31.07.2019ம் தேதிக்குள் பொதுஏலத்துடன் கூடிய ஒப்பந்தபுள்ளி நடத்தி அதன்விபரத்தினை 06.08.2019ம் தேதிக்குள் தெரிவிக்கவும் அறிவுறுத்தப்பட்டது.

அதன்பேரில் இவ்வலுவலக அறிவிப்பு மூலம் 27.06.2019ம் தேதியன்று பொதஏலம் நடத்த அறிவிப்பு வெளியிடப்பட்டது. ஆனால் அன்றைய தினம் நிர்வாக காரணங்களால் பொதுஏலம் தள்ளி வைக்கப்பட்டது. அதன்பின்பு 16.07.2019 ம் தேதியன்று பொதுஏலம் மற்றும் மறுஒப்பந்தபப்புள்ளி கோரப்பட்டது. அதில் டி.திவாகர் என்பவரது ஒப்பந்தப்புள்ளி ரூ.22300/– ம் ஏலக்கேள்வி ரூ.22100/– இருந்ததால் மேற்படி நபரது ஒப்பந்தப்புள்ளியை நகர்மன்ற தீர்மான எண் 546 நாள். 24.07.2019ல் ஏற்கப்பட்டது.



761

இந்நிலையில் நீதிமன்ற தீர்ப்பில் மேற்படி உணவகம் வழக்கு தொடர்பாக 16.08.2019ம் தேதிய வழக்கு விசாரணையில் நீதிமன்றம் நியமித்த வழக்கறிஞர் மேற்பார்வையில் மீள பொதுஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோர உத்தரவிடப்பட்டது. அதனைதொடர்ந்து பொதுஏலத்துடன் கூடிய மறு ஒப்பந்தப்புள்ளி 05.09.2019ம் தேதியில் நடத்தப்பட்டது. நீதிமன்ற உத்தரவின்படி, பொ ஏலம் கோரப்பட்டதில் திரு.வி.ராமர் என்பவரின் உயர்ந்தபட்ச ஏலத்தொகையினை மாத வாடகையாக ரூ.1,27,000/– யை ஏற்றுக்கொள்ளப்பட்டது. இதனைதொடர்ந்து 9 மாத வாடகைத் தொகையினை முன்பணமாக ஏலநிபந்தனைகளின்படி மொத்தம் ரூ.11,43,000/– ஐ செலுத்த கோரி அதற்கான அறிவிப்பும் ஏலதாரருக்கு பலமுறை அனுப்பி வைக்கப்பட்டு முகவரி போலியானதாக உள்ளதால் அறிவிப்பு கடிதங்கள் திரும்பப்பெறப்பட்டது.எனவே திரு.வி.ராமர் ஏலத்தாரர் ஏலநிபந்தனைகளின்படி மேற்படி ஏலத்தொகையினை செலுத்த தவறியதால் நகர்மன்ற தீர்மான எண் 653 நாள்.31.01.2020 மேற்படி கேள்விதாரர் செலுத்தியிருந்த பொறுப்புத்தொகை ரூ.4,00,000/– பறிமுதல் செய்து நகராட்சி பொதுநிதிக்கணக்கில் 31.01.2020ல் வரவு வைக்கப்பட்டு மறுஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோரவும் மன்றத் தீர்மானத்தில் தீர்மானிக்கப்பட்டது. இந்நிலையில் கோவிட்–19 ஊரடங்கு உத்தரவு 30.11.2021 வரை அமுல்படுத்தப்பட்டுள்ளதால் மறு ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோருவதற்கு இயலாத சூழ்நிலை உள்ளது. மேலும் தமிழ்நாடு அரசின் ஊரடங்கு தளர்வு காரணமாக 01.10.2020 முதல் பேருந்துநிலையங்களில் பேருந்து இயக்கம், கடைகள் மற்றும் உணவகங்கள் செயல்பட அனுமதிக்கப்பட்டுள்ளது. பேருந்துநிலையங்களுக்கு வந்துசெல்கின்ற பயணிகள் மற்றும் பொதுமக்கள் சிற்றுண்டி உண்பதற்கு மிகவும் சிரமமாக உள்ளது. எனவே பேருந்துநிலையத்தில் உள்ள உணவகம் தொடர்ந்து செயல்பட ஏதுவாக நடவடிக்கை எடுக்க ஏதுவாக அரசு கூடுதல் வழக்கறிஞர் மூலம் பெறப்பட்ட சட்டக்கருத்துரு அடிப்படையில் 11.12.2020 ம் தேதியில் பேருந்து நிலையத்தில் உள்ள உணவகத்திற்கு பொது ஏலத்துடன் கூடிய ஒப்பந்தப்புள்ளி கோரி செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம் மூலம் 25.11.2020ம் தேதியில் விளம்பரம் பிரசுரம் செய்யப்பட்டது. அதனடிப்படையில் மேற்படி பேருந்து நிலைய உணவகத்திற்கு 11.12.2020ம் தேதியில் ஆணையாளர் தலைமையில் காவல்துறை பாதுகாப்புடன் பொது ஏலத்துடன் கூடிய ஒப்பந்தப்புள்ளி நடத்தப்பட்டது. மேற்படி பொது ஏலத்தில் மூன்று ஏலதாரர்கள் மட்டுமே கலந்து கொண்டார்கள் அதில் அரசு மதிப்பு மாத வாடகை ரூ.127000/– என நிர்ணயம் செய்யப்பட்டது.ஆனால் பொது ஏலத்தில் மூன்று நபர்கள் கலந்து கொண்ட்வர்கள் யாரும் ஏலம் கோர முன்வரவில்லை.அன்றைய தினம் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றது. அதில் திரு.N.மருதுபாண்டியன் த.பெ.க.நல்லுச்சாமி என்பவர் மாத வாடகையாக ரூ.51000/– க்கு ஒப்பந்தப்புள்ளி கோரியது மன்றத்தின் முடிவிற்கு வைக்கப்படுகிறது.

Scanned with CamScanner

**அலுவலகக்குறிப்பு**

1) பேருந்து நிலைய உணவத்திற்கு பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி நடைபெறுவதில் ஏற்படும் சட்டம் ஒழுங்கு பிரச்சினை காரணமாக சென்னை உயர்நீதி மன்ற மதுரை கிளையில் வழக்கு எண் W.P.(MD) No.23224/2018க்கு 05.09.2019 அன்று உயர்நீதி மன்ற உத்தரவின்படி பொதுப்பார்வையாளர் முன்னிலையில் பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி நடைபெற்றதில் திரு.V.ராமர் என்பவர் மாத வாடகையாக ரூ.127000/– கோரியது நகர்மன்றத்தால் ஏற்கப்பட்டு உரிமம் ஒப்படைக்க ஏதுவாக 9 மாத வாடகை ரூ.1143000/– செலுத்தக்கோரி பல அறிவிப்புகள் அனுப்பப்பட்டும் தாங்கள் கூடுதல் வைப்புத் தொகை செலுத்தவில்லை. மேலும் தனியர் கொடுத்த முகவரி போலி என தெரியவந்ததும் போது ஏலக் கட்டுப்பாடுகள் மற்றும் சிறப்பு நிபந்தனைகளின்படி தனியரின் வட்டிர் தொகை ரூ.400000/– பறிமுதல் செய்யப்பட்டு நகர்மன்ற தீர்மான எண் 653 நாள்.31.01.2020 ன்படி நகராட்சி பொது நிதியில் வரவு வைக்கப்பட்டுள்ளது. எனவே ஏலம் போட்டிகள் காரணமாகவும் சட்டம் ஒழுங்கு பிரச்சினை காரணமாகவும் நடைபெற்ற ஏலத்தில் கோரிய உயர்ந்த ஏலக்கேள்வியான மாத வாடகை ரூ.127000/–ஐ என்பதை நிர்வாக நலன் கருதி பொருட்படுத்தாமலும் தணிக்கையில் எழுப்பப்படும் தடைகளிலிருந்து விலக்களித்தும் நகராட்சிக்கு ஏற்படக்கூடிய நிதியிழப்பை இழப்பெனக் கருதாமல் இருக்கவும் மன்றம் அனுமதிக்கலாம்.

2) டிசம்பர் 2018 மாத வாடகை ரூ.21500/–ஆகும் 11.12.2020 அன்று நடைபெற்ற பொது ஏலத்துடன் கூடிய ஒப்பந்தப்புள்ளிகளில் கோரப்பட்ட உயர்ந்த ஒப்பந்தப்புள்ளி மாத வாடகை ரூ. 51000/– என்பது டிசம்பர்2018 மாத வாடகையை காட்டிலும் ரூ.29500/–அதாவது 130 சதவீதம் கூடுதலாக உள்ளது.எனவே நகராட்சிக்கு ஏற்படும் நிதி இழப்பை தவிர்க்கும் பொருட்டு திரு.N.மருது பாண்டியன் த/பெ. நல்லுச்சாமி என்பவர் கோரிய உயர்ந்த ஒப்பந்தப்புள்ளியை மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண்.2768/2018/அ2)

தனிஅலுவலர் மற்றும் ஆணையாளர்,
மேலூர் நகராட்சி.

Scanned with CamScanner